## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.157/2018

2025 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் நீ.ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 02.12.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராதா (CW–1) | வயது | : | 47 /2025 |
| த/க பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | வழக்கறிஞர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நிலவியல் பாதை என்பது அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் ஆவணங்களை கொண்டுதான் சொல்லமுடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களில் புல வரைபடத்தை தவிர எந்த ஆவணத்திலாவது தாவா சொத்தில் நிலவியல் பாதை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, **(தற்போது சாட்சியானவர் நத்தம் நிலவரி திட்ட பட்டா ஆவணத்தில் நிலவியல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.)** நான் ஆய்வு செய்த வகையில்நான் தாக்கல் செய்த ஆவணத்தில் தாவா சொத்துக்கள் பிரதிவாதி பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ராஜாங்கம், தர்மலிங்கம் பெயரில் உள்ளது.

2) தர்மலிங்கத்தை விசாரித்தேனா என்றால் இல்லை. ஆவணத்தில் ராஜாங்கம், தர்மலிங்கம் பெயரில் இருப்பதால் தர்மலிங்கத்திடம் எங்கு உள்ளது, ராஜாங்கத்திடம் எங்கு உள்ளது என்பது குறித்து சர்வேயரிடம் கேட்டேனா என்றால் இல்லை. ராஜாங்கத்திற்கு எவ்வளவு இடம், தர்மலிங்த்திற்கு எவ்வளவு இடம் தாவா சொத்தில் உள்ளது என்று என்னால் அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

3) எனது அறிக்கையில் தாவா சொத்து ராஜாங்கம், தர்மலிங்கம் பெயரில் உள்ளது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.196/6 இல் நிலவியல் பாதை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.196/10 இல் ராஜாங்கம், தர்மலிங்கம் பெயரில் குறிப்பிட்டு இருப்பதில் குறிப்பு என நிலவியல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) நிலவியல் பாதை என்பது எதிர்காலத்தில் அரசாங்கத்தால் பாதையாக வர வாய்ப்பு உள்ளது என்பதை கருதுவதுதான் நிலவியல் பாதை என குறிப்பிடுவார்கள் என்றால் சரியல்ல. பொதுப்பாதையாக அரசாங்கம் அறிவித்தால் அந்த பாதையை பொறுத்து அரசாங்கத்தால் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களாக பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். எனது அறிக்கையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான பட்டா, அ–பதிவேடு, அடங்கல், சிட்டா ஆகிய ஆவணங்களில் தாவா சொத்தின் சர்வே எண்.196/6 மற்றும் 196/10 ஆகியவற்றில் தனிப்பட்ட நபரின் பெயரில்தான் உள்ளது, பாதை என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, பெயர் குறிப்பிடாமல் புன்செய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5) சர்வே எண்.196/6 –ல் ராஜசேகர் பெயரில் அ பதிவேடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 93 என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.196/6 –ல் ராஜசேகர் பெயரிலும் சர்வேஎண். 196/10 இல் தர்மலிங்கம் என்று அ பதிவேடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.196/6 யை உட்பிரிவு செய்யப்பட்டு 196/6 /2A, 2A இல் தர்மலிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் சர்வே எண். 196/10 யை உட்பிரிவு செய்யப்பட்டு 196/10 /2A, 2C இல் ராஜாங்கம், தர்மலிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு கொடுத்த வாரண்டில் தாவா சொத்து சர்வே எண்.196/6 , 196/10 தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

6) எனது அறிக்கையில் சர்வே எண்.196/6 , 196/10 ஆகியவை உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில் சர்வே எண்.196/6 , 196/10 ஆகியவை உட்பிரிவு செய்யப்பட்டு அதன் விஸ்தீரணம் பற்றிய விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த உட்பிரிவின் கீழ் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கையை தாக்கல் செய்தேன் என்று இந்த அறிக்கையின் அடிப்படையில் சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

7) தாவா சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டதால் அதை பற்றிய விபரங்களும் , விஸ்தீரணமும் குறிப்பிடாததால் எனது அறிக்கையான நீ.ம.சா.ஆ.1 ஆவணம் குறைபாடு உடையது என்றால் சரியல்ல. நான் பட்டாதாரர்களை முறையாக விசாரணை செய்யாமல் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை குறைபாடு உடையது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.04 16:29:39 +0530

District Munsif
Mannargudi.